ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2483/05 - 2026 අප්‍රේල් මස 07 වැනි මස අඟහරුවාදා - 2026.04.07

2483/05 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1)(ஆ) ஆம் பிரிவின் கீழ அளவ்வ பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அளவ்வ பிரதேச சபைக்கு, தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி அனுமதியின்றி 3 மாத காலத்திற்கு சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காததன் காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், அளவ்வ பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திருமதி சேனாரத்ன முதியன்சேலாகே யசிந்தா சஜீவனி சேனாரத்ன என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான அளவ்வ பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திருமதி ஜயசுந்தர ஹேரத் முதியன்சேலாகே லக்ஷ்மி சஞ்ஜிலா ஜயசுந்தர என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

அளவ்வ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக்க முதியன்சேலாகே ஹரேந்தர பண்டார ரத்நாயக்க ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான), 66அ(1)(ஆ), என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திருமதி ஜயசுந்தர ஹேரத் முதியன்சேலாகே லக்ஷ்மி சஞ்ஜிலா ஜயசுந்தர என்பவர் அளவ்வ பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**ஆர்.எம்.எச்.பீ.ரத்நாயக்க,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
அளவ்வ பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
அளவ்வ பிரதேச சபை,
2026, ஏப்பிறல் 07.

EOG 04 - 0044

1A - PG 7592 — 08 (2026/04)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.